Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com


**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2013-2014

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Mar. 14 : 759Nos.
  - Up to Feb. 14 : 747 Nos.
- **Performance Mar. 14 …**
  - Turnover growth : 14.49%
  - Employment growth : - 1.26%
  - 100% Attendance : 37.10%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## நிகரற்ற அன்பு!

முன்னொரு காலத்தில் ஒரு இடத்தில் அத்திமரம் ஒன்று இருந்தது. வளமாக இருந்த அந்த மரத்தில் ஏராளமான பழங்கள் பழுத்து இருந்தன. இதனால் அங்கே பறவைகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்த கூட்டத்தில் கிளி ஒன்றும் இருந்தது. அது அந்த மரத்தை தன் நண்பனாகவே நினைத்து அன்பு காட்டியது.

திடீரென்று அந்த மரத்தின் இலைகள் வாடத்தொடங்கின, சில நாட்களில் மரமும் பட்டுப்போயிற்று. அங்கே இருந்த பறவைகள் இனி இங்கு தங்குவதால் பயன் இல்லை என்று புறப்பட்டன. கிளி மட்டும் அங்கிருந்து புறப்படவில்லை.

இதைப்பார்த்த பறவைகள், "கிளியே! இந்த மரம் பட்டுவிட்டது, சிறிது தொலைவில் பழமரங்கள் உள்ளன. நீயும் எங்களுடன் வந்துவிடு, நாம் அங்கே மகிழ்ச்சியாக இருக்கலாம்!" என்றன. அதற்குக் கிளி, "இந்த மரம் என் நண்பன், என் வாழ்வோ, சாவோ அது இங்கே தான், இங்கிருந்து நான் வரமாட்டேன்!" என்று உறுதியுடன் சொன்னது. அதை வற்புறுத்துவதால் பயன் இல்லை என்று நினைத்த பறவைகள் அங்கிருந்து சென்றன. வெயில், மழை என்றும் பாராமல் அந்த மரத்திலேயே தங்கி இருந்தது கிளி.

பசி எடுத்தபோது அந்த மரத்தின் பட்டைகளை உண்டது, கங்கை ஆற்றில் தண்ணீரைக் குடித்தது. இப்படியே காலத்தை கழித்துக் கொண்டிருந்தது அது, தேவதூதன் ஒருவர் அந்த வழியாக வந்தான், பட்டுப்போன மரத்தில் தங்கி இருந்த கிளியை வியப்புடன் பார்த்து,

"கிளியே! சிறிது தொலைவில் நிறைய பழ மரங்கள் உள்ளன, இந்தப் பட்டுப்போன மரத்தில் ஏன் தங்கியிருக்கிறாய்?" என்று கேட்டான், "தேவதூதனே! நானும் இந்த மரமும் நீண்ட காலம் ஒன்றாகவே இருந்தோம். இது என் நண்பன், இது எனக்கு நிறைய உதவி செய்துள்ளது, பட்டுபோய்விட்டது என்பதற்காக இதை விட்டுச் செல்ல விரும்பவில்லை, என் உயிரே போனாலும் இதைப் பிரிய மாட்டேன்!" என்று தழுதழுத்த குரலில் சொன்னது கிளி, அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

இதைக்கேட்டு உள்ளம் நெகிழ்ந்த தேவதூதன் "கிளியே! நட்பின் பெருமையை உன்னால் அறிந்துக்கொண்டேன், உனக்கு என்ன வேண்டும் கேள்! தருகிறேன்! என்றார். "தேவதூதரே! என் நண்பன் மீண்டும் உயிர் பெற வேண்டும், முன்பு இருந்தது போல வளமாக விளங்க வேண்டும். நான் நண்பனை பிரியாமல் இருக்கவேண்டும்" என்று வேண்டியது அது. "அப்படியே தந்தேன்!" என்று சொல்லி விட்டு மறைந்தார் தேவதூதன், உயிர் பெற்ற அந்த மரம் முன்பைவிட வளமாகக் காட்சி தந்தது. எண்ணற்ற பழங்கள் பழுத்தன. அதைப் பார்த்து மகிழ்ந்தது கிளி, உண்மையான அன்பின் மூலம் தன் நண்பனுக்கு வாழ்வு தந்த கிளியை எல்லோரும் பாராட்டினர்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## Solution

When mind is Weak, Situation becomes a Problem,

When mind is Balanced, Situation becomes a Challenge,

When mind is Strong, Situation becomes an Opportunity,

Compiled By : Mrs. M. Indumathy
Purchase

## FUNCTIONAL WISHES



**MAY DAY - 1st MAY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | | |
|---|---|---|---|
| **Mr. T. Stephen** | - | Production | 02nd May |
| **Mr. M. Jegatheesh** | - | Production | 04th May |
| **Mr. M. Venkatraman** | - | Production | 04th May |
| **Mrs. C. Bavani** | - | Admin | 04th May |
| **Mr. S. Dhilip Kumar** | - | Production | 05th May |
| **Mr. D. Raj Kumar** | - | Production | 05th May |
| **Mr. A. Rathish** | - | Production | 07th May |
| **Mr. S. Thommai Antony** | - | Finance | 10th May |
| **Mr. S. Chinnathangam** | - | Coating | 10th May |
| **Mrs. S. Jayanthi** | - | Coating | 10th May |
| **Mr. S. Lingathurai** | - | Coating | 13th May |
| **Mr. M. Raj Kumar** | - | Production | 16th May |
| **Mr. S. Lawrence** | - | Production | 20th May |
| **Mr. P. Porselvan** | - | Production | 20th May |
| **Mr. B. Babu** | - | Production | 20th May |
| **Mr. K. Saravanan** | - | Production | 20th May |
| **Mr. T. Dinesh** | - | Production | 21st May |
| **Miss. L. Menaka** | - | Facilitation | 25th May |
| **Mr. P. Karnan** | - | Production | 25th May |
| **Mrs. P. Jeyalekshmi** | - | Project | 25th May |
| **Mr. N. Murugan** | - | Project | 26th May |
| **Mr. M. Ramesh** | - | Production | 31st May |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஆல்ப்ஸ் மலை அடிவாரத்தில் ஒரு நகரம் அழகான நீர்நிலை அற்புதமான பூங்கா. நீர்நிலையைத் தூய்மைப்படுத்தவும், பூங்காவை அழகாக வைத்திருக்கவும் ஒரு கிழவர் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். நாள் முழுவதும் அவர் நீர்நிலையைத் தூய்மை செய்வார். உதிர்ந்த இலைகளை. விழுந்த கிளைகளை அகற்றுவார். யாருக்கும் அவரைத் தெரியாது. அந்த இடமே ஒரு சுற்றுலா மையமாக மாறியது.

கொஞ்ச நாட்களுக்குப்பின், நகராட்சி நிர்வாகம் “யாரோ ஒரு கிழவருக்குத் தொடர்ந்து சம்பளம் தருகிறோமே. தேவையில்லையே” என்று யோசித்தது. அவருக்கு வேலை போனது. நீர்நிலை மோசமடைந்தது. இலைகள் உதிர்ந்து கிடந்தன. பறவைகள் வருவது குறைந்தது. நீர் நிலையிலிருந்து தொற்றுநோய் பரவியது.

ஆராய்ந்து பிறகு உண்மை தெரிந்தது மீண்டும் அவரை வேலையில் அமர்த்தினார்கள் மறுபடி வசந்தம் மலர்ந்தது.

கண்ணுக்குத் தெரியாத எளிய மனிதர்கள், இந்த பூமியை அழகாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

—கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## Real winners don’t give up!

It was September 25, 2000. Maricel Apatan was an 11-year old girl in Zamboanga. On that day , this little girl went with her uncle to draw water. Along the way, four men met them. They were carrying long knives. They told her uncle to face down on the ground, and they hacked him on the neck and killed him.

Maricel was in total shock, especially that the men were their neighbors. She tried to escape, but the men ran after her. She cried, “Don’t kill me! Have mercy on me!”. But they weren’t listening. With a long knife, a man slashed her on the neck too. Maricel fell to the ground and lost consciousness.

When she woke up, she saw a lot of blood. She also saw the feet of the men around her, but she pretended to be dead. When they walked away, Maricel ran back home. But along the way, she saw that both her hands were falling off. Because the men hacked them too. She cried but she kept running. Sometimes, she would faint and fall to the ground. But she’d regain consciousness and run again. When she was near her home, Maricel called her mother. Upon seeing her daughter, her mother screamed in terror. She wrapped her bloodied child in a blanket and carried her to the hospital.

Here was the problem:

From her house to the highway, it was a 12-kilometer walk. It took them 4 hours just to reach the highway. When they arrived in the hospital, the doctors thought Maricel was going to die. But for 5 hours, they operated on her. It took 25 stitches to stitch together the long knife wound in her neck and back.

Maricel barely survived. And she lost both of her hands. Ironically, the next day was Maricel’s birthday. She was 12

Contd...3

## தெரிந்து கொள்வோம்



People throw gum on the ground and to birds, its look like pieces of bread and when they eat the gum, it gets stuck in there throats. So, they are unable to drink and eat so they slowly die.

---

### தேங்காயின் மகத்துவம்

தென்னை மரத்தின் கனிதான் தேங்காய் என்றாலும் அது பருப்பு வகையோடு பிரித்து அறியப்படுகிறது. சராசரியாக 400 கிராம் உள்ள தேங்காயை சாப்பிட்டு தண்ணீர பருகினால், மாமிசம் உண்பதற்கு நிகரான ஆற்றல் கிடைக்கும். அதிக அளவில் கொழுப்புச்சத்தும், புரதச்சத்தும் தேங்காயில் நிறைந்துள்ளது.

100 கிராம் தேங்காய் பருப்பு 354 கலோரிகள் ஆற்றல் வழங்கக்கூடியது. மற்ற பருப்பு, கொட்டை வகைகளைவிட அதிக அளவில் கொழுப்புகளைக் கொண்டுள்ளது.

தேங்காய் தண்ணீர், கோடைக்கு உகந்த புத்துணர்ச்சி பானமாகும். இதில் ஒற்றைச் சர்க்கரை, எலக்ட்ரோலைட்டுகள், தாது உப்புகள் மற்றும் சட்டோகைனென் போன்ற பல உடல் செயற்காரணிகள் உள்ளன. இவை ஜீரணம் மற்றும் வளர்ச்சிதை மாற்றத்தில் பங்கெடுக்கும் நொதிகளாகும்.

தேங்காய் எண்ணை சமைப்பதிலும், கூந்தல் உறுதிக்கும், வேறுபல மருந்து தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

தேங்காய் நீரில் உள்ள சைட்டோகைனென், முதுமையை தடுக்கும் ஆற்றல் கொண்டதாக கண்டறியப்பட்டுள்ளது.

தேங்காய் பருப்பில் தாமிரம், கால்சியம், இரும்பு, மாங்கனீசு, மக்னீசியம் மற்றும் துத்தநாகம் போன்ற அத்தியாவசிய தாது உப்புக்கள் உள்ளன.

பி –காம்ப்ளக்ஸ் வைட்டமின்களான போலேட், ரிபோ பிளேவின், நியாசின், தயாமின், பைரிடாக்சின் போன்றவையும் சிறந்த அளவில் காணப்படுகிறது.

இவை உடல் உள்ளுறுப்புகள் இயக்கத்திற்கும், உடல் புத்துணர்ச்சிக்கும் அவசியமானவையாகும்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

---

years old. But tragedy didn't end there. When they went home, they saw their home was gone. It was ransacked and burned down by the goons. Being very poor, Maricel's family also didn't have P50,000 for their hospital bills. But God send many angels along the way to help them.

A distant relative, paid for hospital bills and helped them bring the criminals to court. They were sentenced to prison. Today, she's staying with the nuns at Regina Rosarii with Sr. Eppie Brasil. But this is the incredible miracle.

Instead of staying down, Maricel kept running. Instead of cursing God why she had no hands, she now uses her wrists in incredible ways that will boggle your mind.

Maricel Apatan

- Maricel was cited as the most industrious, best in computer, and most courteous in the School for Crippled Children.
- In 2008, she graduated from a course in Hotel and Restaurant Management. She even received a Gold medal for Arts and Crafts.
- In 2011, she finished her education to be a chef. Yes, a Chef without hands.

Nothing can stop this young lady from reaching her dreams.

Collected from Internet

---

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXVIII)

**ஜிட்**

தொழிற்சாலைகள் அல்லது அலுவலகங்கள், ஏன் வீடுகளில் கூட, எந்த புதிய விஷயத்தையும் செயல்படுத்துவதற்கு முன்னால், நாம் ஒரு முக்கியமான கேள்வியைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இதை செயல்படுத்துவது யாருடைய பொறுப்பு?

அதாவது, 'செய்ரி' தத்துவத்தின்படி பொருள்களை அவசியமானவை, அவசியமற்றவை என்று பிரித்து, உரியது உரிய இடத்தில் வைக்கப்படும் என்பதை உறுதி செய்யப்போகிறவர்கள் யார்? முதலாளிகளா மேலாளர்களா? அல்லது ஊழியர்கள், தொழிலாளர்களா? எல்லாரும்தான்.

பணியிடத்தோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும், இந்த விஷயத்தில் தங்களுடைய கடமைகளை உணர்ந்து, தனிப்பட்ட கவனம் எடுத்துக்கொண்டு செயல்பட்டாலொழிய, '5S' தத்துவங்களை யதார்த்தத்தில் செயல்படுத்துவது மிகவும் சிரமம்.

- கருவிகள், உபகரணங்களைப் பயன்படுத்துகிறவர்கள், அவற்றை உரிய இடங்களில் திருப்பி வைக்கவேண்டும்.
- ஒரு கருவி அல்லது உபகரணம் தவறான இடத்தில் வைக்கப்பட்டிருந்தால் அல்லது பணியிடத்தில் அநாவசியமாகக் கிடந்தால், அந்தத் தவறை யார் செய்தார்கள் என்று விசாரித்துக் குற்றம் சாட்டுவதைவிட, சட்டென்று உரிய இடத்தில் அதைத் திருப்பி வைத்துவிடுவது உத்தமம்.
- தரையில் ஒரு குப்பை கிடந்தால், வேறு யாராவது சுத்தம் செய்வார்கள் என்று காத்திருக்கக்கூடாது, எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவது ஒவ்வொருவருடைய பொறுப்பு.

Contd...4

## கவிதைகள்

### தேடலில் தான்......

தேடாமல் எதுவும் கிடைப்பதில்லை...
தட்டாமல் எதுவும் திறப்பதில்லை!
தேடாமலும், தட்டாமலும்
எளிதாய் எதுவும் கிடைத்தால்...
வாழ்க்கை சுவாரஸ்யம்
அற்று வதங்கி போய்விடும்!
வரங்களை வேண்டி
இறைவனிடம் கைநீட்டுபவனை விட...
விரல்கள் பத்தையும் மூலதனமாக்கி,
உழைப்பவன் முதுமை பெறுகிறான்!
முயற்சியற்று வீணா முடங்கிக் கிடப்பவனை...
சோம்பல் சிறைபிடிக்கிறது...
நம்பிக்கைக் கொண்டு
நகர்ந்து செல்பவனைத் தேடி
வெற்றி மாலை இடுகிறது!
சரித்திரம் படைப்பவனும்
சாதிக்கத் துடிப்பவனும் சறுக்கி
வீழ்வதில்லை...
அவமானங்களை ஒதுக்கித்தள்ளி
அதிலிருந்து எழுகிறவன்
தோல்வி அடைவதில்லை!
தூரத்தில் என்பதில்லை...
காலடியில் கூட கிடைக்கலாம்...
தேடுவோம்... தேடுவோம்...
தேடலில் தான் வாழ்க்கை!

Compiled By : Miss. P. Nirmala Devi
Finance

## சிந்தனைக்கு

"கற்றுக்கொள்வதே வாழ்க்கை, அது இன்னமும் தாமதமாகி விடவில்லை. கற்றுக்கொள்ளுங்கள்".

### உத்வேகமளிக்கும் மந்திரம்

"மகிழ்ச்சி என்பது, நீங்கள் சிந்திப்பது, நீங்கள் பேசுவது, நீங்கள் செய்வது ஆகிய மூன்றும் இணைந்திருக்கும் போது, கிடைக்கின்ற உணர்வாகும்."

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இதெல்லாமே ஆரம்பித்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் கொஞ்சம் பழகியபிறகு, இதுபோன்ற ஒழுங்கு இல்லாமல் நம்மால் வேலை செய்யவே முடியாது என்கிற நிலைமை வந்துவிடும். அதுதான் 'செய்ரி'யின் முக்கியமான இலக்கு.

தொழிலாளர்கள், ஊழியர்கள் அல்லது வீட்டு உறுப்பினர்களிடையே இந்தப் பழக்கத்தைக் கொண்டுவருவதற்காக, 'செய்ரி திருவிழா'க்களை அடிக்கடி நடத்தலாம்.

இந்தத் திருவிழாக்களின் போது, எல்லாரும் அவர்களுடைய வழக்கமான வேலைகளைச் சில மணி நேரங்களில் நிறுத்திவிட்டு, 'செய்ரி'யைச் செயல்படுத்துவது எப்படி என்பதில் பயிற்சி பெறுவார்கள்.

உதாரணமாக அவசியமானவை, அவசியமற்றவை என்கிற வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது எப்படி, சிவப்பு, பச்சை, மஞ்சள் ரிப்பன்கள், குவாரண்டைன் வழிமுறை, அடிக்கடிப் பயன்படும் பொருள்கள். எப்போதாவது பயன்படும் பொருள்கள், எதை எங்கே வைக்கவேண்டும் என்பது போன்ற பல விஷயங்களை, சிறு நாடகங்கள் போல் நடித்துக் காண்பித்து, இதை உங்களுடைய மேஜையில்/பணியிடத்தில் பின்பற்றிப் பாருங்கள் என்று உற்சாகப்படுத்தலாம்.

இது போன்ற திருவிழாக்கள் வருஷத்துக்கு ஒருமுறையாவது நடத்தப்படுவது அவசியம். அப்போதுதான், புதிதாக வந்திருக்கிறவர்களுக்கும் இதன் முக்கியத்துவம், பலன்கள் புரிந்து, அவர்களும் 'செய்ரி'யைப் பின்பற்றத் தொடங்குவார்கள்.

இந்தச் சந்தர்ப்பங்களில், 'செய்ரி'யைச் சரியாகச் செயல்படுத்திப் பலனடைந்த தொழிலாளர்கள் அல்லது பிரிவுகள் தங்களுடைய அனுபவங்கள், டிப்ஸ்களைப் பகிர்ந்து கொள்ளலாம், 'சிறந்த செய்ரி சாம்பியன்' என்பது போன்ற விசேஷப் பரிசுகளும் வழங்கலாம்.

ஆனால், 'செய்ரி'யை யார் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று எப்படித் தெரிந்துகொள்வது?

இதற்கு, 'செய்ரி ஆடிட்' என்று ஒரு சமாச்சாரம் இருக்கிறது. ஆடிட்டர்கள் நிறுவனங்களின் நிதி நிலைமை, வரவு செலவுகளை ஆய்வு செய்வதுபோல், 'செய்ரி' விதிமுறைகளை ஒவ்வொருவரும் எந்த அளவுக்கு பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ந்து மார்க் போடும் வழிமுறை இது.

தொடரும்...

## ELECTROLYZER CHLORINATOR

